بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**நீங்கள் உங்களிடம் இறையச்சத்தையும், தூய்மையையும் உருவாக்கினால், துஆக்கள் செய்வது, இறைவனை நினைவு கூர்வது ஆகியவற்றின் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால், தஹஜ்ஜுத் தொழுவது, ஸலவாத் ஓதுவது ஆகியவற்றை தொடர்ந்து முறையாக பேணி வந்தால் அல்லாஹ் தஆலா உங்களுக்கும் கூட உண்மையான கனவுகளையும், கஷ்ஃப் காட்சிகளையும் காட்டுவான். அவற்றிலிருந்து உங்களுக்கும் பங்கு வழங்கப்படும்.**

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 31.07.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

கடந்த சில நாட்களுக்கு முன் ஒருவர் ஒரு சிறு வீடியோ காட்சியை காட்டினார். அதில் ஆப்ரிக்காவை சார்ந்த ஒரு மவ்லவி பெரிய வயதில் உள்ளவர்களுக்கு திருக்குர்ஆனை கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார். திருக்குர்ஆன் ஓதுவதில் அவர்கள் சிறு தவறிழைத்தாலும் பிரம்பால் அவர்களை அடித்து அவர்களது நிலைமையை மிகவும் மோசமானதாக ஆக்கிக் கொண்டிருந்தார். இதன் விளைவாக மக்கள் திருக்குர்ஆன் ஓதுவதையே விட்டுவிட்டு ஓடி விடுகின்றனர். இதன் காரணமாகவே முஸ்லிம்களில் அரபியர் அல்லாத அதிகமான மக்களுக்கு திருக்குர்ஆனை ஓதக்கூட தெரியாமல் இருக்கின்றது. எனவே, **திருக்குர்ஆனை கற்றுக் கொடுக்க வேண்டுமென்றால் திருக்குர்ஆனை ஓதுவதற்கு பேரார்வமும் அதன் மீது அன்பும் ஏற்படும் வகையில் அத்தகைய வழிமுறையை மேற்கொண்டவாறு அதனை கற்றுக் கொடுக்க வேண்டும்.**

கடந்த சில நாட்களுக்கு முன் இங்கு வசித்து வருகின்ற ஜப்பானைச் சார்ந்த ஒரு பெண் என்னை சந்திக்க வந்திருந்தார்கள். சிறிது காலத்திற்கு முன்பு அவர்கள் பைஅத் செய்திருந்தார்கள். மூன்று வருடங்களுக்குள் அவர்கள் திருக்குர்ஆனை முழுமையாக ஓதி முடித்து விட்டதாக என்னிடம் கூறினார்கள். எனக்கு திருக்குர்ஆனை ஓதிக்காட்ட வேண்டும் என்றும் அவர்கள் விரும்பினார்கள். நான், சரி ஓதுங்கள் என்று கூறினேன். அப்போது அவர்கள் ஆயத்துல் குர்ஸியை எந்த அளவு அதன் கருத்துக்களில் மூழ்கியவாறு ஓதினார்கள் என்றால் அதைப் பார்த்து எனக்கு வியப்பு ஏற்பட்டது. அசல் விஷயம் இதுவேயாகும். **திருக்குர்ஆன் மீது எத்தகைய அன்பு இருக்க வேண்டும் என்றால் அதன் கருத்துக்களில் மூழ்கியவாறு அதை ஓத வேண்டும்.** பிறருக்கு காட்டுவதற்காக மட்டும் காரிகளைப் போன்று தொண்டையிலிருந்து சொற்களை உச்சரிப்பது மட்டும் நோக்கமாக இருக்கக்கூடாது. அல்லாஹ் திருக்குர்ஆனை கவனமாகவும், மெதுவாகவும் ஓதுமாறு கட்டளையிட்டுள்ளான். நிறுத்தி நிதானமாக எந்த அளவு சொற்களை சரியான முறையில் உச்சரிக்க முடியுமோ அந்த அளவு சரியாக உச்சரித்தவாறு அதை ஓத வேண்டும். அரபிகள் போன்று சொற்களை எங்களால் உச்சரிக்க முடியும் என்று நாம் கூறுவதாக இருந்தால் பிறகு இது கடினமான விஷயமாகும். அரபு நாட்டில் பிறந்து வளர்ந்தவர்களைத் தவிர சில எழுத்துக்களை அரபிகள் அல்லாதவர்கள் சரியாக உச்சரிக்கவே முடியாது.

அசல் விஷயம் இறைவனது சொற்கள் மீது அன்பு இருக்க வேண்டும் என்பதாகும். அந்த சொற்களை முடிந்த வரை சரியான முறையில் உச்சரிக்க முயற்சி செய்ய வேண்டும். காரியாக ஆகுவது மட்டும் நோக்கமாக இருக்கக்கூடாது. அவ்வாறே பிறருக்கு காட்டுவதற்காக போட்டிகளில் கலந்து கொள்வதாக மட்டும் இருக்கக்கூடாது. முஸ்லிம்களில் பெரும்பாலாருக்கு நான் ஏற்கனவே கூறியது போன்று திருக்குர்ஆனை ஓதத் தெரியாது. ஆப்ரிக்காவில் பல இடங்களில் நமது முபல்லிக்களுக்கு இது போன்ற பல சந்தர்ப்பங்கள் எதிர்கொள்ள வேண்டியது வருகிறது. ஆனால் ஆரம்பத்தில் இருந்தே அந்த மக்களுக்கு திருக்குர்ஆனை மீண்டும் கற்றுக் கொடுக்க வேண்டியது வருகின்றது. ஆரம்ப காயிதாவை கற்றுக் கொடுப்பதிலிருந்து ஆரம்பிக்க வேண்டியது இருக்கின்றது. இந்த மக்களுக்கும் நாம் திருக்குர்ஆனை கற்றுக் கொடுக்க வேண்டும். எனவே, **திருக்குர்ஆனை கற்றுக் கொடுக்கின்ற ஆசிரியர்கள் எத்தகைய வழிமுறையை மேற்கொள்ள வேண்டுமென்றால் அதன் மூலம் திருக்குர்ஆனை கற்றுக் கொள்வதற்கு ஆர்வம் ஏற்பட வேண்டும்.** இந்த ஜப்பானிய பெண்ணுக்கு திருக்குர்ஆனை கற்றுக் கொடுத்த பாகிஸ்தானைச் சார்ந்த அந்த பெண்ணுக்கு அல்லாஹ் நற்கூலியை வழங்குவானாக. அவர்கள் திருக்குர்ஆனை அந்த பெண்ணுக்கு கற்றுக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல் திருக்குர்ஆனின் மீது அவர்களுக்கு அன்பையும் ஏற்படுத்தியுள்ளார்கள் என்பதும் தெரிய வருகின்றது.

எனவே, காரிகள் போன்று ஓதுவது அசல் விஷயமல்ல. இவ்வாறு சொற்களை உச்சரிக்க முடியவில்லை என்றால் அதற்காக திருக்குர்ஆன் ஓதுவதையே விட்டுவிட வேண்டும் என்றும் கருதி விடக்கூடாது. திருக்குர்ஆனை ஓதுவது அவசியமானதாகும். அதில் சிறப்பான நிலையை ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும். ஒவ்வொரு நாளும் திருக்குர்ஆனை ஓதுவதன் பக்கம் ஒவ்வொரு அஹ்மதிக்கும் கவனம் இருக்க வேண்டும். ஆனால், அசல் சொற்களை முடிந்த வரை எவ்வளவு சிறந்த முறையில் உச்சரிக்க முடியுமோ அவ்வளவு சிறந்த முறையில் உச்சரிக்க முயற்சி செய்ய வேண்டும். அதில் சிறப்பான நிலையை ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும்.

அந்த அரபியர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை சந்திக்க வந்தார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இரண்டு அல்லது மூன்று முறை ஸாத் (ض) என்ற சொல்லை உச்சரித்த போது நீங்கள் எப்படி வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருக்க முடியும் ? உங்களுக்கு ஸாத் (ض) என்ற எழுத்தைக்கூட உச்சரிக்க முடிவதில்லையே?

என்று கூறினார். இந்த அரபியர் மிகவும் வீணானவொரு செயலை செய்துள்ளார். அரபிகள் தங்களைப் பற்றி நாங்கள் நாத்திகீன் பிஸ்ஸாது அதாவது ஸாதை சரியாக உச்சரிப்பவர்கள் நாங்களே என்று கூறுகின்றனர். இந்தியர்கள் அதை சரியாக உச்சரிக்க முடியாது என்று கூறுகின்றனர்.

அரபு நாடுகளிலுள்ள அஹ்மதிகளும் இவ்விஷயத்தை தங்கள் முன்னால் வைத்திருக்க வேண்டும். பொதுவாக பெரும்பாலார் இந்த விஷயங்களை புரிந்து கொள்கின்றனர். ஆனால் சிலரது இயல்பில் இவ்விஷயத்தில் பெருமை கொள்கின்ற நிலையும் இருக்கின்றது. இஸ்லாம் ஒவ்வொரு சமுதாயத்தின் உள்ளத்தையும் வென்றவாறு அல்லாஹ்வின் வார்த்தைகளை அவர்களுக்கு அடையாளம் காட்டுவதுடன் அவற்றை படிப்பதற்கு அவர்களது உள்ளங்களில் அன்பையும் உருவாக்க வேண்டியது இருக்கின்றது. ஒவ்வொரு சமுதாயத்தினரும் சொற்களை உச்சரிக்கும் விதமும் வெற்வேறாக இருக்கின்றது. திருக்குர்ஆன் மீதுள்ள அன்பின் காரணமாக ஒவ்வொருவரும் அதை சிறந்த முறையில் ஓதுவதற்கு முயற்சி செய்கின்றார். அவ்வாறு முயற்சி செய்யவும் வேண்டும். நிச்சயமாக தர்தீலை அதாவது கவனமாகவும், நிறுத்தி நிதானமாகவும் ஓதுவதை கவனத்தில் கொள்ள வேண்டும். எவர்களுக்கு சரியான உச்சரிப்புடன் திருக்குர்ஆனை ஓத முடியுமோ அவர்கள் புதிதாக முஸ்லிம்களாக ஆகின்றவர்களுக்கு இவ்விஷயத்தில் உதவி செய்ய வேண்டும். ஆனால், கேலி கிண்டல் செய்வதற்கு எவருக்கும் அனுமதி இல்லை.

நமது நிலைமைகளை சரியானதாக ஆக்கிக் கொண்டு நமது ஈமானை எவ்வாறு வளர்ச்சியடைய செய்ய வேண்டும் ? மேலும் இறைவனுடன் எவ்வாறு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி கவனமூட்டியவாறு ஜமாஅத்திற்கு அறிவுரை வழங்கியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

**நீங்கள் உங்களிடம் இறையச்சத்தையும், தூய்மையையும் உருவாக்கினால் துஆக்கள் செய்வது, இறைவனை நினைவு கூர்வது ஆகியவற்றின் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால், தஹஜ்ஜுத் தொழுவது, ஸலவாத் ஓதுவது ஆகியவற்றை தொடர்ந்து முறையாக பேணி வந்தால் அல்லாஹ் தஆலா உங்களுக்கும் கூட உண்மையான கனவுகளையும், கஷ்ஃப் காட்சிகளையும் காட்டுவான். அவற்றிலிருந்து உங்களுக்கும் பங்கு வழங்கப்படும்.** தனது இல்ஹாம் மற்றும் உங்களுடன் அவன் பேசுவது என்ற நற்பேற்றையும் அவன் உங்களுக்கு வழங்குவான். ஒரு மனிதனுக்கு உயிருள்ள அற்புதம் என்பது அவனிடம் அது வெளிப்படுவதேயாகும். சந்தேகமின்றி ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் காட்டிய அற்புதமும் பெரியது தான். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் காட்டிய அற்புதமும் பெரியது தான். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் காட்டிய அற்புதமும் பெரியது தான். ஆனால், சுயமே மனிதனிடம் வெளிப்படும் அற்புதத்தைப் பொருத்தவரையில் தன்னிடம் வெளிப்படுகின்ற அந்த அற்புதம் தான் அவருக்கு எல்லாவற்றையும் விட பெரிய அற்புதமாக இருக்கும்.

இந்த நாட்களில் இது தொடர்பாக மக்கள் கேள்விகளை கேட்கின்றனர். அற்புதங்களை பார்க்க வேண்டும் என்றால் இதற்காக அல்லாஹ்விடம் ஒரு தொடர்பை அவர்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். ஈமானில் அதிகரிப்பு மற்றும் சுயமாக தன்னிடம் வெளிப்படும் அடையாளம் தொடர்பாக ஹஸ்ரத் சாஹிப் ஸாதா ஹஸ்ரத் அப்துல் லதீஃப் ஷஹீது சாஹிப் அவர்களின் உதாரணத்தை எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

சாஹிப் ஸாதா ஹஸ்ரத் அப்துல் லதீஃப் ஷஹீது சாஹிப் அவர்களைப் பாருங்கள். அவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட போது காதியானில் சில நாட்கள் வரை தங்கியிருந்து விட்டு காபுல் சென்ற போது அங்கிருந்த ஆளுநர் அவர்களை அழைத்து நீங்கள் தவ்பா செய்யுங்கள் என்று கூறினார். அதற்கு அவர்கள், நான் எவ்வாறு தவ்பா செய்ய முடியும் ? நான் காதியானிலிருந்து வந்த சமயத்தில் அப்போதே நான் கனவில் எனக்கு விலங்கு மாட்டப்பட்டிருப்பதைப் பார்த்தேன். எனவே, இறைவன் இவ்வழியில் உமக்கு விலங்குளை மாட்ட வேண்டியது வரும் என்று கூறியிருக்கும் போது இப்போது நான் இந்த விலங்குகளை அவிழ்ப்பதற்கு எவ்வாறு முயற்சி செய்ய முடியும் ? இந்த விலங்குகள் எனது கைகளிலேயே மாட்டப்பட்டிருக்க வேண்டும். அதன் மூலமாக எனது இறைவனின் வார்த்தைகள் நிறைவேற வேண்டும்.

அவர்களுக்கு இந்த உறுதி எவ்வாறு ஏற்பட்டதென்றால், இது தொடர்பாக அவர்களே ஒரு கனவை கண்டிருந்தார்கள். இவ்வாறே ஒருவர் எவ்வளவு தான் குறைவான அறிவை உடையவராக இருந்தாலும் அவர் ஒரு கனவை கண்டிருந்தால் அவரிடமிருந்த கோழைத்தனத்தின் காரணமாக அதை அவர் மறைத்தால் அது வேறு விஷயமாகும். அது அல்லாமல் அவருக்கு அவரது பொய்யான கனவின் மீது கூட இதை விட அதிகமான நம்பிக்கை இருக்கும். எனவே, மனிதனின் ஈமான் வலுவானதாக இருந்தால் இறைவனுடன் அவருக்கு தொடர்பு இருந்தால் பிறகு அத்தகைய மனிதன் உலகவாதிகளுக்கு அஞ்ச மாட்டான்.

இதற்கு இன்னொரு உதாரணத்தை கூறியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

லூதியானாவைச் சார்ந்த சூஃபி அஹ்மது ஜான் சாஹிப் அவர்கள் மிகப்பெரும் சான்றோராக திகழ்ந்தார்கள். அவர்களது காலத்தில் வாழ்ந்த நல்ல மனிதர்களில் ஒருவராக திகழ்ந்தார்கள். ஒரு முறை ஜம்முவின் மஹாராஜா அவர்கள் தன்னிடம் வருமாறு அவர்களுக்கு அழைப்பு விடுத்தார்கள். நீங்கள் ஜம்மு வந்து எனக்காக துஆ செய்யுங்கள் என்று கூறினார்கள். ஆனால், அவர்கள் அந்த அழைப்பை மறுத்து விட்டார்கள். நீங்கள் துஆ செய்விக்க விரும்புகின்றீர்கள் என்றால் நீங்கள் என்னிடம் வாருங்கள். நான் ஏன் உங்களிடம் வர வேண்டும் ? என்று கூறிவிட்டார்கள். ஆக, மனிதனுக்கு அல்லாஹ்வுடன் தொடர்பு இருந்தால் எவ்வளவு பெரிய மனிதரைக் கண்டும் அவரைப் பார்த்து மனிதன் பயப்பட மாட்டான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது வாதத்திற்கு முன்னதாக மக்களுக்கு அவர்கள் மீது எந்த அளவு பற்று இருந்தது. வாதத்திற்கு பிறகு என்ன நிலைமை ஏற்பட்டது என்பதை எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

பராஹீனே அஹ்மதிய்யா என்ற நூலுக்கு கிடைத்த புகழை வைத்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது இலட்சக்கணக்கான மக்களுக்கு பற்று இருந்தது என்று நம்மால் கூற முடியும். ஆனால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய வாதத்திற்குப் பிறகு அன்னார் மீது பற்று கொண்டவர்கள் பலரும் அவர்கள் மீது வெறுப்பு கொள்ள ஆரம்பித்து விட்டனர். மேலும் எவரை நாங்கள் தங்கம் என்று நினைத்தோமோ அவர் பித்தளையாக தெரிவது தான் எங்களுக்கு வேதனையாக இருக்கின்றது என்று கூறினர். அத்தகைய லட்சக்கணக்கான மக்கள் ஒரே நொடியில் தவறான எண்ணம் கொண்டவர்களாக ஆகிவிட்டனர். எதுவரை என்றால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பைஅத்திற்கான அறிவிப்பை செய்த போது முதல் நாளன்று 40 நபர்களே பைஅத் செய்தனர்.

இன்றைய நாட்களில் சில T.V சேனல்களில் (அவற்றை பெயர்தாங்கி இஸ்லாமிய T.V சேனல் என்றே கூற வேண்டும்) தேவைப்பட்ட சமயத்தில் மிர்ஸா சாஹிப் அவர்கள் பெரும் தொண்டாற்றினார். ஆனால் பிறகு அவர் கெட்டுப்போய் விட்டார் என்றெல்லாம் பெரிதாக பேசப்படுகிறது. இவர்கள் உள்ளத்தால் குருடர்களாக இருக்கின்றனர். மேலும் எவரை அல்லாஹ் தங்கமாக ஆக்கி இருக்கின்றானோ அவர்களை இம்மக்கள் பித்தளையாக கருதுகின்றனர். இறைவனது செயலளவிலான சாட்சியத்தின் பக்கம் பார்ப்பதற்கு பகரமாக இவர்கள் தமது நஃப்ஸின் இருள்களில் மூழ்கிவிட்டனர். மேலும் குறைவான அறிவை உடைய முஸ்லிம்களையும் இவர்கள் வழிகெடுக்கின்றனர். அல்லாஹ் இவர்களுக்கு அறிவை வழங்குவானாக.

1931 ஆம் ஆண்டு மஜ்லிஸே ஷீராவில் லூதியானாவிலுள்ள தாருல் பைஅத்தைப் பற்றி பேசப்பட்டது. அப்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அதில் கலந்து கொண்ட பிரதிநிதிகளிடம் இவ்வாறு கூறினார்கள்:

எனது பார்வையில் இது மிகவும் முக்கியமானதொரு விவகாரமாகும். (அதாவது லூதியானாவிலுள்ள தாருல் பைஅத் தொடர்பாக விஷயத்தை கூறுகின்றார்கள்) எனது பார்வையில் இது மிகவும் முக்கியமானதொரு விவகாரமாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் குறிப்பாக இதைப்பற்றி குறிப்பிட்டு கூறியுள்ளார்கள். லூதியானாவை பாபே லுத் என்று கூறியுள்ளார்கள். அங்கு வைத்து தான் தஜ்ஜால் கொல்லப்படுவான் என்ற முன்னறிவிப்பு இருக்கின்றது. அதாவது தஜ்ஜாலின் முடிவு அங்கு வைத்து தான் ஏற்பட்டது. அத்தகைய இடத்திற்கு காதியானிலிருந்து பைஅத் வாங்குவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சென்றார்கள். எனவே இந்த இடத்தை பற்றி குறிப்பாக ஜமாஅத்திற்கு உணர்வு இருக்க வேண்டும்.

ஒரு முறை காதியானில் வைத்து ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீய் (அலை) அவர்களிடம் பைஅத் வாங்குமாறு வேண்டிய போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இங்கு பைஅத் வாங்க மாட்டேன். அதாவது காதியானில் பைஅத் நடக்காது என்று கூறினார்கள். பிறகு லூதியானாவில் வைத்து பைஅத் வாங்கப்பட்டது. அங்கிருந்த பீரான மர்ஹூம் சூஃபி அஹ்மது ஜான் சாஹிப் அவர்களுக்கு அல்லாஹ் தஆலா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீய் (அலை) அவர்களது வாதத்திற்கு முன்னதாகவே அன்னார் மீது ஈமான் கொள்வதற்கான நல்வாய்ப்பை வழங்கியிருந்தான். அவர்கள் தமது வஃபாத் சமயத்தில் தமது குடும்பத்தினரை ஒன்று திரட்டி ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் அவர்கள், தான் மஸீஹ் என்று வாதம் செய்வார்கள். அப்போது நீங்கள் அனைவரும் அவர்கள் மீது ஈமான் கொள்ள வேண்டும் என்று கூறியிருந்தார்கள். அவ்வாறே இவர்கள் எல்லோருமே ஹுஸூர் (அலை) அவர்கள் மீது ஈமான் கொண்டனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்:

இந்த இடத்தின் வரைபடத்தை குறிப்பாக தயார் செய்ய வேண்டும். பைஅத் நடந்த இடத்தை தனியாக காட்டும் வகையில் அதில் அடையாம் இடப்பட வேண்டும் என்பது எண்ணமாகும். இந்த சந்தர்ப்பத்தில் அங்கு மாநாடு நடத்த வேண்டும். இந்த இடத்தில் 40 பேர்களிடம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பைஅத் வாங்கியிருந்தார்கள். அந்த அனைவரது பெயரும் அந்த இடத்தில் எழுதப்பட வேண்டும்.

இப்போது அல்லாஹ்வின் அருளால் லூதியானாவிலுள்ள அந்த வீடு ஜமாஅத்திடம் இருக்கின்றது. அங்குள்ள ஜமாஅத் எந்த அளவு இதற்கேற்ப செயல்படுட்டிருக்கின்றது. அங்கு என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதைப் பற்றிய எந்த அறிக்கையும் என்னிடம் இப்போது இல்லை. எவ்வாறிருப்பினும் அதைப்பற்றி தெரிய வரும். இன்ஷா அல்லாஹ். அதை நினைவிற்குரிய ஓர் இடமாக ஆக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது ஓர் சஹாபிக்கு அன்னார் மீது இருந்த பேரன்பு பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

மியான் அப்துல்லாஹ் சாஹிப் சனோரி அவர்களும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது இதுபோன்ற ஒரு பேரன்பையே வைத்திருந்தார்கள். ஒருமுறை அவர்கள் காதியான் வந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை சந்தித்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவர்களிடத்தில் ஒரு வேலையை செய்யுமாறு கூறியிருந்தார்கள். அதனால் ஹஸ்ரத் அப்துல்லாஹ் சனோரி சாஹிப் அவர்கள் எடுத்திருந்த விடுப்பு முடிவடைந்து அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் திரும்பி செல்வதற்கான அனுமதி கோரிய போது ஹுஸூர் (அலை) அவர்கள் இப்போது இங்கு தங்கி செல்லுங்கள் என்று கூறினார்கள். அதனால் அவர்கள் மேலும் சில நாட்கள் இருப்பிற்காக விண்ணபித்தார்கள். அவர் வேலை பார்த்த இடத்திலிருந்து மேலும் விடுப்பு கொடுக்க முடியாது என்று பதில் வந்தது. அவர்கள் இது பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் தெரிவித்தார்கள். அதற்கு ஹுஸூர் (அலை) அவர்கள்

இப்போது இங்கு தங்குங்கள் என்று கூறினார்கள். அவர்கள் தான் வேலை பார்த்த துறைக்கு இப்போது நான் வர முடியாது என்று கடிதம் எழுதினார்கள். இதனால் அந்த துறையை சார்ந்தவர்கள் அவர்களை பணி நீக்கம் செய்து விட்டனர். அவர் ஒரு அரசுத் துறையில் பணியாற்றி வந்தார். நான்கு அல்லது ஆறு மாதங்கள் வரை எவ்வளவு காலம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தங்கும்படி அன்னாரிடம் கூறியிருந்தார்களோ அவ்வளவு காலம் அவர்கள் அங்கேயே தங்கியிருந்தார்கள். பிறகு அவர்கள் திரும்பி வந்ததும் அவர் வேலை பார்த்த துறை இந்த கேள்வியை எழுப்பியது. அதாவது எந்த அதிகாரி அவரை பணிநீக்கம் செய்தாரோ அந்த அதிகாரிக்கு அதற்கான உரிமையே இல்லை என்று கூறப்பட்டது. பிறகு அவர்கள் மீண்டும் அவர்கள் செய்து வந்த வேலையில் அமர்த்தப்பட்டார்கள். மேலும் எவ்வளவு காலம் அவர்கள் காதியானில் தங்கியிருந்தார்களோ அந்த மாதங்களுக்கான சம்பளமும் அவர்களுக்கு கிடைத்துவிட்டது.

இதுபோன்றே இன்னொரு உதாரணத்தையும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள். அது கபூர்தலாவைச் சார்ந்த முன்ஷி ஃஸபர் அஹ்மது சாஹிப் அவர்களுடன் தொடர்புடையதாகும். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் முன்ஷி சாஹிப் அவர்கள் கூறிய அதே சொற்களில் உங்களுக்கு இந்த சம்பவத்தை கூறி விடுகின்றேன். முன்ஷி சாஹிப் கூறுகின்றார்கள்: நான் சப் ரிஜிஸ்டரர் ஆன பிறகு ஒரு முறை என்னிடம் இருந்த முக்கிய கோப்புகளை மூடி வைத்து விட்டு காதியான் சென்றேன். காதியான் சென்று மூன்று நாட்கள் ஆனதும் மூன்றாவது நாளில் நான் ஹுஸூர் (அலை) அவர்களிடம் அனுமதி கேட்டேன். அதற்கு ஹுஸூர் (அலை) அவர்கள் இப்போது இங்கு தங்குங்கள் என்று கூறினார்கள். பிறகு ஒரு மாதம் கழிந்தது. முக்கிய தாழ்கள் வீட்டில் இருந்தன. வேலையும் நின்று போனது. அதனால் வேலை பார்த்த இடத்திலிருந்து மிகவும் கடுமையான வார்த்தைகள் அடங்கிய கடிதங்கள் வர ஆரம்பித்தன. ஆனால், இங்கு எனது நிலைமை எவ்வாறு இருந்தது என்றால், இந்த கடிதங்கள் தொடர்பான எண்ணமே எனக்கு வரவில்லை. நான் அனைத்தையும் மறந்து விட்டேன். கடிதங்கள் வந்தால் வந்து கொண்டே இருக்கட்டும் என்று விட்டு விட்டேன். **ஹுஸூர் அவர்களது நட்பில் எத்தகைய பேரின்பமும் திழைத்திருக்கும் தன்மையும் இருந்ததென்றால் வேலை போய்விடுமே என்ற எண்ணமும் வரவில்லை.** இறுதியில் மிகவும் கடுமையான சொற்கள் அடஙகிய ஓர் கடிதம் அங்கிருந்து வந்தது. நான் அந்த கடிதத்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு முன்னால் வைத்து விட்டேன். அவர்கள் அந்த கடிதத்தை படித்துவிட்டு, **நம்மால் வர முடியாது என்று எழுதிவிடுங்கள்** என்று கூறினார்கள். நான் அதே சொற்களை எழுதி விட்டேன். அதற்கு பிறகு ஒரு மாதம் கழிந்தது. ஒரு நாள் ஹுஸூர் (அலை) அவர்கள் என்னிடம் இங்கு வந்து எத்தனை நாட்கள் கழிந்து விட்டன என்று கேட்டார்கள். பிறகு அவர்களே நாட்களை எண்ணிப் பார்த்து விட்டு, நல்லது ! நீங்கள் சென்று விடுங்கள் என்று கூறினார்கள். நான் அங்கிருந்து சென்று விட்டேன். கபூர்தலா சென்று சேர்ந்ததும் நீதிபதியான லாலா ஹர்ஜன்ந் தாஸ் அவர்களது வீட்டிற்கு சென்றேன். அந்த நீதிபதி இருந்து வந்த நீதிமன்றத்தில் தான் எனக்கு வேலை இருந்து வந்தது. வேலை தொடர்பாக என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது? வேலையிலிருந்து நான் வெளியேற்றப்பட்டு விட்டேனா ? அல்லது எனக்கு அபராதம் விதிக்கப்பட்டு உள்ளதா ? என்பதை அறிய நீதிபதி வீட்டிற்கு சென்றேன். நான் அவரது வீட்டிற்கு சென்ற பிறகு நீதிபதி அவர்கள் என்னிடம் முன்ஷி ஜீ அவர்களே ! மிர்ஸா சாஹிப் அவர்கள் உங்களை வரவிட்டிருக்க மாட்டார் என்று கூறினார்கள். அதற்கு நான் ஆமாம் என்றேன். அதற்கு நீதிபதி அவர்கள், அவரது கட்டளைக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது கட்டளைக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று கூறிவிட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

மிஹான் அதாவுல்லாஹ் சாஹிப் அவர்கள் ஒரு அறிவிப்பில் இந்த விஷயம் அதிகமாக கூறப்பட்டுள்ளது. அதாவது மர்ஹூம் முன்ஷி சாஹிப் அவர்களிடம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மால் வர முடியாது என்று எழுதும்படி கூறிய போது நான் அந்த சொற்களை எழுதி நீதிபதி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இவர்கள் எப்படிப்பட்ட பிரிவினர் என்றால் இவர்கள் எத்தகைய உயர்வான முன்மாதிரியை காட்டியுள்ளனர் என்றால் நமது கண்கள் இவர்களுக்கு பின்னால் வந்திருந்த கூட்டத்தினரை கண்டு கீழே தாழ்ந்து விடாது. நமது ஜமாஅத்திலுள்ள சகோதரர்களிடம் எவ்வளவு தான் கவனமற்ற தன்மை இருந்தாலும் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களது சஹாபி நமக்கு முன்னால் தமது முன்மாதிரியை எடுத்துக் காட்டும் போது அவர்களுக்கு முன்னால் இந்த பிரிவினரின் முன்மாதிரியை நம்மால் எடுத்து வைக்க முடியும். அவ்வாறே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களது சஹாபாக்கள் கியாமத் நாளன்று தங்களது உயர்ந்த பணிகள் தொடர்பான பணிகளை எடுத்து வைத்தால் நாமும் பெருமையுடன் இந்த சஹாபாக்களின் பெருமையை எடுத்து வைக்க முடியும். மேலும் ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்கள் எனது சமுதாயத்திற்கும், மஹ்தியின் சமுதாயத்திற்கும் இடையிலுள்ள வித்தியாசம் என்ன ? என்பதை என்னால் கூற முடியாது என்று கூறினார்கள். இதுவும் கூட உண்மையில் இத்தகைய மக்கள் இருந்ததன் காரணமாகவே அவர்கள் அவ்வாறு கூறினார்கள். இந்த மக்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் ஏனைய சஹாபாக்கள் போன்று எல்லா வகையான தியாகங்களும் செய்யக் கூடியவர்களாக இருக்கின்றனர். மேலும் இறைவனது வழியில் எல்லா விதமான துன்பங்களையும் சகித்துக் கொள்ள அவர்கள் தயாராக இருந்தனர். ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களையே நீங்கள் பாருங்கள். இறைவன் அன்னாருக்கு தானே ஜமாஅத்தில் ஒரு சிறப்பான இடத்தை வழங்கி விட்டதால் நான் அவர்களது பெயரை கூறவில்லை. அது அல்லாமல் அன்னாரது

தியாகங்கள் தொடர்பான சம்பவங்களும் இழப்பிற்குரியதாகும். அவர்கள் காதியான் வந்த சமயத்தில் பேராவில் அவர்களது மருத்துவ தொழில் நடந்து வந்தது. அங்கு கிளினிக் தொடக்கப்பட்டிருந்தது. பணி மிகவும் விரிவான நிலையில் நடந்து கொண்டிருந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் அன்னார் திரும்பி செல்ல அனுமதி கேட்ட போது ஹுஸூர் (அலை) அவர்கள் எங்கே போகப் போகின்றீர்கள். நீங்கள் இந்த இடத்திலேயே இருந்து விடுங்கள் என்று கூறினார்கள். பிறகு ஹஸரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தனது பொருள்களை எடுத்து வருவதற்கு கூட அங்கு செல்லவில்லை. மாறாக, வேறொரு நபரை அனுப்பி வைத்து பேராவிலிருந்து தமது பொருட்களை கொண்டு வர வைத்தார்கள். இந்த தியாகங்கள் தான் ஜமாஅத்தை இறைவன் முன்னிலையில் தனிச்சிறப்புமிக்க ஒன்றாக மாற்றுகின்றது. இந்த உயர் தகுதியை பெறுவதற்கே ஒவ்வொரு நபரும் முயற்சி செய்ய வேண்டும். **வெறுமனே தத்துவ ரீதியிலான ஈமான் மனிதனுக்கு எந்த பலனையும் தராது. எந்த ஈமானில் பேரன்பு மற்றும் நேசத்தின் இனிமை இருக்குமோ அந்த ஈமானே பயன்தரக்கூடியதாக இருக்கும்.** தத்துவவாதி தனது அன்பை வெளிப்படுத்தும் விஷயங்களை எவ்வளவு தான் பேசினாலும் ஓர் ஆதாரம் என்ற அளவில் மட்டுமேயன்றி அதற்கு வேறு எந்த மதிப்பும் இருக்காது. அவர்கள் உண்மையின் அழகை உள்ளத்தின் கண்களால் பார்க்காமல் அறிவின் கண்களால் மட்டும் பார்த்துள்ளனர்.

ஆனால் எவர்கள் அறிவின் கண்களால் அல்லாமல் உள்ளத்தின் கண்களால் அல்லாஹ்வின் புறமிருந்து வந்துள்ள உண்மையையும் அல்லாஹ்வின் புனித சின்னங்களையும் அடையாளங்கண்டு கொள்கின்றாரோ அவரை எவரும் ஏமாற்ற முடியாது. ஏனென்றால் மூளையின் பக்கம் தத்துவத்தின் கை எழுகின்றது. உள்ளத்தின் பக்கம் பேரன்பின் கை எழுகின்றது. அல்லாஹ் நமக்கு உள்ளத்தின் கண்கள் மூலமாக காலத்தின் இமாமை அடையாளம் கண்டு கொள்வதற்கும் அதில் தொடர்ந்து நிலைத்திருப்பதற்குமுள்ள நற்பாக்கியத்தை வழங்குவானாக. நாம் எப்போதும் அல்லாஹ்வின் புனித சின்னங்களை அடையாளங்கண்டு கொள்ளக்கூடியவர்களாக ஆவோமாக. மேலும் ஒருபோதும் ஷய்த்தானால் நம்மை ஏமாற்றாமல் இருக்கட்டுமாக.

தொழுகைக்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் சவுத்தி நவாப் தீன் சாஹிப் அவர்களது மகனான மவ்லவி தர்வேஷ் குர்ஷீத் அஹ்மது சாஹிப் பிரபாகர் அவர்களுடைய ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைத்தார்கள். மர்ஹூம் 2015 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28 ஆம் தேதி தமது 94 வது வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

மேலும் ஹுஸூர் அவர்கள், அல்லாஹ் இவர்களது சந்ததிகளுக்கு எப்போதும் கிலாஃபத்துடன் தொடர்பு வைப்பதற்கான நல்வாய்ப்பை வழங்கிக் கொண்டே இருப்பானாக என்று துஆவும் செய்தார்கள்.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 31.07.2015
Tamil Translation : Moulavi. M. Rafique Ahmed Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516